முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 550**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.04.2021**, வியாழக்கிழமை

1. அறமாக வந்த ஆறுமுக அரங்கனே
அண்ணலாக கலியுக மக்களுக்கு அருள்புரியும்
ஆறுமுகன் என் அவதார சூட்சும ஞானியே
அரங்கனே உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுப்ரமணியர் யானும் அருளுவேன்
அரங்கன் தர்மம் உலகை வெல்லும்
ஆசிதந்து அரங்கனுள் யானிருக்க
அற்புதம்பட அரங்கன் கொள்கைகள் இந்த உலகை வெல்லும்
3. வெல்லுமப்பா ஞானவான்கள் எனும் படைசேர்த்து
விரைந்து ஞானயுகமாற்றம் தரும்
இல்லாமை போக்கி இந்த கலியுத்தில்
எல்லோருக்கும் தேவைகள் பூர்த்திபடும்
4. பூர்த்திபட அரங்கனுள் யானிருந்து
புண்ணியவான்களை தேர்வுசெய்து வர
நேர்த்தியாய் அரங்கன் தொடர்புகொண்ட எல்லா மக்களும்
நிலவுலகில் ஞானவழி சிறந்து
5. சிறந்துமே அரங்கன் சக்திவழி
செப்பிடுவேன் எந்தன் அருளைபெற்று
பரந்த இந்த பேருலகமெங்கும்
பரோபகார சக்தி பெருகிபெருகி
6. பெருகியே கலியுகம் மாற்றம் பெறும்
பிரணவ சித்தியாக எங்கும் சூட்சும சேவைகள்
சேவைகள் சிறந்து உலகமெங்கிலும்
சீர்திருத்தம் சிறப்பான மாற்றம் காணும்
7. அவணியில் அரங்கன் தொண்டர்கள் மூலமாகத்தான்
இந்த அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
வரங்கள் பெற வையகத்தில் நிலைத்தன்மை காண
வடிவேலன் என் சக்தியான அரங்கனிடம் ஓங்காரக்குடில் நோக்கி வாருங்கள்
8. வாருங்கள் அரங்கன் வழி ஞானபலம் பெற்று
வையகத்தில் ஞானவான்களாக சிறந்து
பெருமைமிக்க ஞானவாழ்வு  பெறவாரீர்
புகன்றிய ஆறுமுகன் என் ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.